நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்னும் சொல்லப்போனால் கடந்த ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும் இருந்ததைவிட, எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது அந்த எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கிறது என்று கூட தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் அந்த அளவிற்குக் கூட இருக்கக் கூடாது, அந்த நோய் வராமல் தடுக்கப்பட வேண்டும் என்பதற்காக தீவிரமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2. கவன ஈர்ப்பு

(அ) பிரிக்கப்பட்ட இராமநாதபுரம் பகுதிகளில் தனித்தனி மாவட்ட நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வ. சத்தியமூர்த்தி, திரு. மு. தென்னவன் ஆகிய இருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து ஒரு கவன ஈர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவ்விருவரில் ஒருவர் மாண்புமிகு சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராமநாதபுரம் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டும், பிரிக்கப்பட்ட ஒவ்வொரு மாவட்டத்திலும் இன்னமும் தனி மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்படாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

இராமநாதபுரம் மாவட்டம் பிரிக்கப்படுவதற்கு முன்பு அதனுடைய மாவட்ட நீதிமன்றமும் (District and Sessions Court) மாவட்ட கூடுதல் நீதிமன்றமும் (Additional

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

District and Sessions Court) மதுரையில் இருந்து இயங்கி வந்தன. இராமநாதபுரம் மாவட்டம் மூன்று புதிய மாவட்டங்களாக முறையே,

இராமநாதபுரம் மாவட்டம்,

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், மற்றும்

காமராசர் மாவட்டம்

என்று பிரிக்கப்பட்ட பின்பும், இந்த மாவட்டங்களின் வழக்குகளை விசாரிக்கும் மாவட்ட நீதிமன்றமும், கூடுதல் மாவட்ட நீதிமன்றமும் தொடர்ந்து மதுரையிலேயே இயங்கி வருகின்றன.

2. இந்த மாவட்டங்களின் நீதித்துறை தலைமையிடங்களை புதிய மாவட்டங்களின் தலைமையிடங்களுக்கு மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருந்தது, காமராசர் மாவட்டத்திற்கு விருதுநகரை தலைநகராகக் கொண்டு அங்கு மாவட்ட நீதிமன்றம் ஒன்றை அமைக்க விருதுநகர் வழக்கறிஞர்கள் சங்கமும் திருவில்லிபுத்தூரை தலைநகராகக் கொண்டு அங்கு மாவட்ட நீதிமன்றம் அமைக்க திருவில்லி புத்தூர் வழக்கறிஞர்கள் சங்கமும் அரசுக்கு கோரிக்கைகள் விடுத்தன. அரசு சென்னை உயர்நீதிமன்றத்தைக் கலந்தாலோசித்து கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பித்துள்ளது :—

(1) தற்போது மதுரையில் செயல்படும் இராமநாத புரம் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தை இராமநாதபுரத்திற்கு மாற்றுதல்.

(2) மதுரையில் செயல்படும் இராமநாதபுரம் கூடுதல் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தை, காமராசர் மாவட்டத்தின் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றமாக மாற்றி (இந்த நீதிமன்றத்தை திருவில்லிபுத்தூரில் அமைப்பதா அல்லது விருதுநகரில் அமைப்பதா என்ற கருத்துவேறுபாடு காரணமாக) தற்காலிகமாக மதுரையிலேயே அமைத்தல்.

(3) பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திற்காக சிவகெங்கையில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தைப் புதியதாக அமைத்தல்.

3. மேற்படி நீதிமன்றங்களுக்குத் தேவையான பணியாளர் பதவி இடங்களை ஏற்படுத்துதல், மேசை நாற்காலிகள் போன்ற சாமான்களை வாங்குதல், தட்டச்சு இயந்திரங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் வாங்குவதற்கு உயர்நீதிமன்றத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி புதிய நீதிமன்றங்

1991 ஜூலை 12] *[திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி]*

களை அமைப்பதால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 33.66 இலட்சம் தொடர் இனச் செலவும் மேலும் சுமார் ரூ. 16.55 இலட்சம் தொடரா இனச் செலவும் ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

4. இராமநாதபுரம் மாவட்டத்திற்கான புதிய மாவட்ட நீதிமன்றத்தை மட்டும் உடன் ஆரம்பிப்பதற்கு உயர்நீதி மன்றத்தின் கருத்து கேட்கப்பட்ட பொழுது, உயர்நீதி மன்றம் மூன்றுமாவட்டங்களின் புதிய மாவட்ட நீதிமன்றங்கள் ஒரே நேரத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று கருத்து தெரிவித்துள்ளது.

5. தற்பொழுது உயர்நீதிமன்றம் மூன்று மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றங்கள் இயங்க முன்பு அனுமதிக்கப்பட்ட பணியாளர்களுடன் கூடுதல் பணியாளர்கள் (Additional staff) தேவையென்றும் அதற்கு அனுமதி அளிக்குமாறும் அரசைக் கேட்டுள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

9-35 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983-ல் இராமநாதபுரம் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டபோது ஏனைய அலுவலகங்கள் எல்லாப் அந்தந்த மாவட்டத் தலைநகரங்களுக்குக் கொண்டுவரப்பட்டு விட்டன. ஆனால் மாவட்ட நீதிமன்றம் மட்டும் ஒன்பது ஆண்டுக் காலமாக இழுபறி நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. அரசு எடுக்கிற அவசர முடிவுகளுக்கும், உயர்நீதி மன்றம் எடுக்கிற முடிவுகளுக்கும் கருத்து வேறுபாடு இருப்பதாகவும், மாவட்ட நீதிமன்ற நீதிபதிகளுக்கு மதுரை நகரின் வாழ்க்கையை விட்டுவிட்டு இராமநாதபுரம் போன்ற இரண்டாம் தர நகரத்திற்கு குடிபுக இஷ்டம் இல்லை என்றும் பொது மக்கள் மத்தியில் பேசப்படுகிறது. கட்டிடம் இல்லை என்ற காரணத்தைப் பல ஆண்டு காலம் சொல்லிவந்து, தற்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் கட்டிடங்கள் ஒதுக்கப்பட்ட பிறகும் இன்றுவரை நீதிமன்றம் மாற்றப்படாமல் இருப்பதற்குப் பிரத்தியேகமான காரணம் ஏதேனும் இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர்

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இனிய தலைவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் முகவை மாவட்டத்தை முகவை மாவட்டம் என்றும், பசும்பொன் தேவர் மாவட்டம் என்றும், காமராஜர் மாவட்டம் என்றும் பிரித்த பிறகு உடனடியாக அந்தந்தப் பகுதிகளில் மாவட்ட நீதிமன்றங்கள் அமைய வேண்டுமென்றும் ஆணையிட்டிருந்தார்கள். அவர்கள் காலத்திலேயே அதற்குத் தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. அது அமைகின்ற காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி இடையில் அமைந்துவிட்டது. அதன் காரணமாக மாவட்ட நீதிமன்றங்கள் உரிய இடங்களில் உயர்நீதிமன்றத்தினுடைய பரிந்துரையின்படி அமைய காலதாமதமாகிவிட்டது. 22, நவம்பர் 1988–வது நாளன்று உயர்நீதிமன்றம் மூன்று இடங்களைத் தேர்வு செய்து இதில் மாவட்ட நீதிமன்றத்தை அமைக்க ஆலோசனை சொன்னது.

The Registrar, High Court, among other things, has sent the following proposals in his D.O. letter No. 547/84 dated 22-11-1988:—

(1) Shifting of the Principal District and Sessions Court and the Sub-Court, Ramanathapuram, now functioning at Madurai, to Ramanathapuram with the existing staff;

(2) Constitution of a District and Sessions Court at Srivilliputhur with additional staff and by shifting the Additional District and Sessions Court of Ramanathapuram with existing staff, now functioning at Madurai, to Srivilliputhur for Kamarajar District; and

(3) Constitution of a District and Sessions Court at Sivagangai for Pasumpon Thevar Thirumagan District

என்று 22, நவம்பர் 1988-ல் உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்தது. அதை அன்றைய தி.மு.க. அரசு 20, பிப்ரவரி 1990-ல் முழு மனதாக ஏற்றுக்கொண்டது. ஆனால் என்ன காரணம் பற்றியோ 10, ஜூன் 1990 அன்றையதினம் தி.மு.க. அரசில் சட்டத்துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு.சாதிக்பாட்சா அவர்கள் திடீரென்று பத்திரிகையில் ஒரு பேட்டியைக் கொடுத்தார்கள். The then Hon. Minister for Law said in the Press interview on 10th June 1990 that the State of Tamil Nadu has not yet decided to locate the District and Sessions Court in Kamarajar District, either at Srivilliputhur or at Virudhunagar. The said Press interview was against the announcement in the Assembly on 9th April 1990.

9, ஏப்ரல் 1990 அன்றே அரசாங்கத்தினுடைய கொள்கைக் குறிப்பிலும் உயர்நீதிமன்றத்தினுடைய பரிந்துரையை ஏற்று, இந்த மூன்று இடங்களில் ஒன்றில் அமைக்க அரசாங்கம் ஒத்துக்கொண்டது. ஆனால் என்ன காரணத்தாலோ அன்றைக்கு அந்த முறையைத் தள்ளிப்போட்டு அந்த மாவட்ட நீதிமன்றம் அமைய அவர்கள் உறுதி செய்யவில்லை. அதன் காரணமாக தாமதம் ஆகிறதே தவிர வேறு காரணம் அல்ல. இதனை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து விரைவில் உயர்நீதிமன்றம் என்ன பரிந்துரை சொல்லியிருக்கிறதோ, அதன் மீது எங்கள் முதல்வர் அவர்கள் என்ன சொல்கிறார்களோ அதன்படி நிச்சயமாக மூன்று மாவட்டங்களிலும் ஒரே நேரத்தில் மாவட்ட நீதி மன்றம் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

9-40 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. தென்னவன்.

திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களில் வாய்தா போடுவது வழக்கம். அதைப்போல கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வர வேண்டிய நீதிமன்றம் வராமல் போனதற்கு என்ன காரணம்? அதற்கான தடைகளை தகர்த்தெறிந்து— தடைகளை தகர்க்கிற தடந்தோள்மிக்க அரசாக இந்த அரசு இருப்பதால்—அந்த நீதிமன்றங்கள் விரைவில் இராமநாதபுரத்தில் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். காமராசர் மாவட்டத்தில் நீதிமன்றம் அமைப்பது சம்பந்தமாக உயர்நீதிமன்றத்தின் பரிந்துரை என்ன? கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் பரிந்துரை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, இராமநாதபுரத்தில் மாவட்ட நீதிமன்றம் அமைவதில் எந்தச் சிக்கலும் இல்லை, சிரமமும் இல்லை. அரசாங்கம் அதற்குரிய நிதியாதாரத்தை ஒதுக்கிவிட்டது. இறுதியாக அடிஷனல் ஸ்டாப் தேவையென்று உயர்நீதிமன்றம் கேட்டிருக்கிறது. அதனை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து, அடிஷனல் ஸ்டாப் போட்டவுடன் நிச்சயமாக, துரிதமாக விரல் விட்டு எண்ணக்கூடிய

1991 ஜூலை 12] *[திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி]*

நாட்களுக்குள்ளாக அந்த நீதிமன்றமும், அதைப்போலவே காமராசர் மாவட்ட நீதிமன்றமும், பசும்பொன் மாவட்ட நீதிமன்றமும் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சில பகுதிகளில் யானைக் கால் நோயினால் ஏற்பட்டுள்ள பாதிப்பைத் தடுக்க மருத்துவ வசதிகள் அளிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து ஒரு கவன ஈர்ப்பை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டத்தில் வெகு வேகமாகப் பரவி வரும் யானைக்கால் நோயினால் குறிப்பாக கருங்கல், புதுக்கடை, தலக்குளம், களியக்காவிளை, நட்டாலம் திருவிதாங்கோடு, இரணியல் ஆகிய பகுதிகளில் ஆயிரக்கணக் கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதைத்தடுக்க வெகு விரைவில் அரசு அதிரடி நடவடிக்கை மேற்கொள்ள தயாராக இருக்கிறதா என்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

கன்னியாகுமரி மாவட்ட மக்கள் தொகை 16,51,800-ல் 4,27,239 பேர்கள் யானைக்கால் நோய் பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய பகுதிகளில் வாழ்கின்றனர் என்று தீவிர ஆய்வுக்குப்பின் கண்டறியப்பட்டது.

அவர்களில் 3,10,574 பேர்களிடம் இரவு நேரங்களில் ரத்தம் எடுத்து அதில் மைக்ரோ பைலேரியா நுண்கிருமிகள் இருக்கின்றனவா என்று சோதனை செய்யப்பட்டது. அதில் 5386